18th August 1960]

Hospital at Gingee

* 250 *Q.*—**Sri K. GOPALA KOUNDER** : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) செஞ்சியில் உள்ள ஆஸ்பத்திரிக்கு நோயாளிகள் அதிகம் பேர் வருவதால் இன்னும் ஒரு வார்டு கட்டும்படி தென்னாற்காடு ஜில்லா மெடிகல் ஆபிசர் சிபாரிசு செய்துள்ளாரா ?

(ஆ) அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration.

Sri K. GOPALA KOUNDER : செஞ்சி சர்க்கார் ஆஸ்பத்திரியில் பத்து 'பெட்' உள்ள வார்டு ஒன்றுதான் இருக்கிறது. ஆண்களும், பெண்களும் ஒரே வார்டில் அனுமதிக்கப்படுவதால் திரை கட்டிக் கொண்டு உடை மாற்றிக்கொள்ளவேண்டியிருக்கிறது. மறைவு என்பதே இல்லை. ஆகவே 20 பெட் வசதி உள்ள இன்னொரு வார்டு கட்டவேண்டும். பிரசவ வார்டு ஒன்றும் தனியாக ஏற்படுத்தவேண்டும். இதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : புதிதாக வார்டு கட்டுவதற்கான ஏற்பாடு பரிசீலனையில் இருக்கிறது. அது ஆனதும் ஆண்களுக்கு வேறு தனியாகவும், பெண்களுக்கு வேறு தனியாகவும் வார்டு ஏற்படும். பிரசவத்திற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

Sri K. GOPALA KOUNDER : அதை எவ்வளவு காலத்திற்குள் கட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்படும் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இது பற்றியெல்லாம் சிபார்சு வந்திருக்கிறது. அதற்காக பிளான், எஸ்டிமேட் எல்லாம் கேட்கப்பட்டிருக்கிறது. பிளான், எஸ்டிமேட் எல்லாம் வந்தவுடன் அதற்கு அரசாங்கத்தார் சாங்ஷன் செய்வார்கள்.

State Film Advisory Board

*252 *Q.*—Sri V. K. KRISHNAMURTHY (on behalf of Sri S. NAGARAJA MONIGAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the present members of the State Film Advisory Board and when they were nominated or elected and their term of office;

(*b*) how many of them are officials and how many non-officials; and

(*c*) the basis on which they are generally chosen?

The Hon. Sri C SUBRAMANIAM : (*a*) & (*b*) : The Board consists of 5 members, 2 officials (the Commissioner of Police, Madras, who is ex-officio Chairman of the Board and the Director

[18th August 1960

of Public Instruction, also an ex-officio Member) and 3 non-officials appointed by Government, whose term of office is one year. The seats of the non-official members are vacant at present pending re-constitution of the Board.

(*c*) Selection of non-official members is made by the Government on the recommendation of the Commissioner of Police, Madras. The names of only those persons who are interested in the matters specified in section 6 of the Madras Cinemas (Regulation) Act, 1956, are recommended by the Commissioner of Police taking into consideration their experience, status and suitability.

SRI A. VEDARATHNAM : இவ்வளவு நிபுணர்கள் சேர்ந்து இருந்தும்கூட பல படங்களில் இன்னும் ஆபாசக் காட்சிகள் குறையாமல் இருக்கின்ற காரணத்தினால், அதைக் குறைப்பதற்கு ஏதாவது அரசாங்கமே விதிகள் ஏற்படுத்தி அந்தக் குழு அவ்விதிகளை அனுஷ்டிப்பதற்கான முறையை யோசிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது வெறும் அட்வைசரி பாடிதான். அதைக் கவனிப்பதற்காக சென்சார் போர்ட் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக மத்திய சர்க்கார் தான் படங்களைத் தணிக்கை செய்து வருகிறது. இப்பொழுதெல்லாம் நல்ல படங்கள்தான் வந்துகொண்டிருக்கின்றன என்பது பொது மக்களின் அபிப்பிராயம்.

Pay Commission's recommendations

* 253 *Q*.—SRI V. K. RAMASWAMY MUDALIYAR.
SRI N. R. THIAGARAJAN. } : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount of pay and dearness allowance paid to the officers and staff of the Madras Government during 1959–60;

(*b*) What would be the expenditure if the revised scales of pay and allowances as recommended by the Pay Commission are adopted by the Government for a year; and

(*c*) the extra expenditure involved, both recurring and non-recurring by adopting the recommendations of the Pay Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The amount of pay and Dearness allowance paid to the officers and staff of the Madras Government during 1959–60 are as indicated below :

	(RUPEES IN LAKHS.)
Pay of officers	2,00.85
Pay of Establishments	9,83.69
Allowances and Honoraria	10,88.71
Total ...	22,73.25